கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்க புதிய வழிமுறைகள்: தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜன.3–

தமிழகத்தில் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்தை வழங்க புதிய வழிமுறைகளை உருவாக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழக சட்டசபையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், ''கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மைக்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு இந்தத்துறை மூலம் செயல்படுத்தப்படும்'' என்று அறிவித்திருந்தார்.

இதற்கான வழிமுறைகளை உருவாக்கி அரசுக்கு சிறுபான்மையினர் நலன் இயக்குநர் அனுப்பியுள்ளார். அதில், சிறுபான்மையினர் நலனுக்காக மட்டுமே அந்த கல்வி நிறுவனம் செயல்பட வேண்டும். அந்த கல்வி நிறுவனம், சிறுபான்மையினரால் தொடங்கப்பட்டு தொடர்ந்து சிறுபான்மையினராலே நடத்தப்பட்டு வர வேண்டும். சிறுபான்மையினர் அல்லாதவரால் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்தை வழங்க முடியாது.

குறிப்பிட்ட சிறுபான்மை கல்வி நிறுவன அறக்கட்டளையின் அனைத்து அறங்காவலர்கள் அல்லது நிர்வாகக்குழுவின் உறுப்பினர்களும், அந்த குறிப்பிட்ட சிறுபான்மை பிரிவைச் சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும்.

தொழில் கல்வியை வழங்கும் சிறுபான்மையினர் தொடங்கி நிர்வகிக்கும் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள், அனுமதிக்கப்பட்ட அளவில் 50 சதவீதத்திற்கு மிகாமல் சிறுபான்மையின மாணவர்களை சேர்க்கலாம். அதில் காலியிடம் இருந்தால், தகுதியின் அடிப்படையில் அரசு அதிகாரி தயாரிக்கும் பொதுப்பட்டியலின் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை நடத்தலாம்.

விண்ணப்பிக்கும் சிறுபான்மையினர், மதம் அல்லது மொழி அடிப்படையிலான சிறுபான்மையினராக இல்லாத பட்சத்தில், அவர் சிறுபான்மையினர் தானா என்பதை தமிழகத்தின் மக்கள் தொகை அடிப்படையில்தான் அரசு கணக்கிடுமே தவிர, அந்த கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடத்தில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிடாது என்று கூறியுள்ளார்.

மேலும் அவர், பள்ளி, கல்லூரி போன்ற அனைத்து வகை கல்வி நிறுவனங்களுக்கும் சிறுபான்மை அந்தஸ்து வழங்கக்கோரும் விண்ணப்பங்களை சிறுபான்மையினர் நலன் இயக்குநரே பெறுவார். அவரே இணைப்பு அலுவலராகவும் செயல்படுவார். 15 நாட்களுக்குள் அந்த விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு தகுதி நிர்ணயம் செய்யப்படும்.

அதன் பிறகு அந்த விண்ணப்பத்தை அதிகார குழு முன்பு சிறுபான்மையினர் நலன் இயக்குநர் வைப்பார். அந்த குழுவுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் தலைவராக இருப்பார்.

உயர் கல்வித்துறை, பள்ளிக்கல்வித்துறை உள்ளிட்ட அரசுத்துறைகளின் முதன்மைச் செயலாளர்கள் அதன் உறுப்பினராக இருப்பார்கள். அந்த குழு விண்ணப்பங்களை ஆய்வு செய்து சிறுபான்மை அந்தஸ்துக்கான அங்கீகாரத்தை வழங்கும். பின்னர் சிறுபான்மையினர் நலன் இயக்குநர் சான்றிதழை வழங்குவார் என்று கூறியிருந்தார்.

அரசு அதை பரிசீலித்து, அந்த அதிகார குழுவின் தலைவராக தலைமைச் செயலாளரை அரசு நியமிக்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர், உறுப்பினராக இருப்பார். ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்படும். அதற்கான இணையதளம் விரைவில் உருவாக்கப்படும். சிறுபான்மையினர் நலன் இயக்குநர் கூறியுள்ள மற்ற பரிந்துரைகளை பின்பற்றலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மெட்ரோ ரெயிலில் 6 கோடி பேர் பயணம்

சென்னை, ஜன.3–

7 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடந்த ஆண்டில் மெட்ரோ ரெயிலில் 6 கோடி பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில்களில் நாளொன்றுக்கு சராசரியாக 2.2 லட்சம் பேர் முதல் 2.3 லட்சம் பேர் வரை பயணிக்கிறார்கள். நாளுக்கு நாள் பயணிகள் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கடந்த 2015ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை 2 கோடியே 80 லட்சம் பேர் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளனர்.

கடந்த 2019ம் ஆண்டில் 3 கோடியே 28 லட்சம் பேர் பயணித்துள்ளனர். 2020ம் ஆண்டில் கொரோனா தாக்கம் காரணமாக மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தற்காலிகமாக சேவை நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் அந்த ஆண்டில் 1 கோடியே 18 லட்சம் பேர் மட்டுமே பயணித்திருந்தனர். 2021ம் ஆண்டில் (மே, ஜூன் சேவைகள் இல்லை) 2 கோடியே 53 லட்சம் பேர் பயணித்திருந்தனர்.

கடந்த 2022ம் ஆண்டில் 6 கோடியே 9 லட்சத்து 87 ஆயிரத்து 765 பேர் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளனர். இதுவரை சென்னை மெட்ரோ ரெயில்களில் கடந்த 7 ஆண்டுகளில் (2015 – 2022) 15 கோடியே 88 லட்சத்து 8 ஆயிரத்து 208 பேர் பயணித்துள்ளனர்.

சென்னையில் நடக்கும் சர்வதேச புத்தக கண்காட்சிக்கு ரூ.6.60 கோடி நிதி

சென்னை, ஜன.3

நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடக்கும் முதல் சர்வதேச புத்தக கண்காட்சிக்கு ரூ.6.60 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியீட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித்துறையின் கீழுள்ள பொது நூலக இயக்ககம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகியவை தென் இந்திய புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்துடன் (பபாசி) இணைந்து வருகிற 16, 17 மற்றும் 18ந் தேதிகளில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் முதல் சர்வதேச புத்தக கண்காட்சியை நடத்துகின்றன.

இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள் அதில் பங்கேற்கின்றனர். இந்த சர்வதேச புத்தக கண்காட்சிக்கு ரூ.6.60 கோடி நிதியை ஒதுக்கி, பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளர் காகர்லா உஷா அரசாணை வெளியிட்டுள்ளார்.

பபாசி சார்பில் சென்னை புத்தக கண்காட்சி 6ந் தேதி ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தொடங்குகிறது. அங்கு 16ந் தேதி சர்வதேச புத்தக கண்காட்சி நடக்கிறது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ரூ.1,000 கோடி நிதி திரட்ட அரசாணை வெளியீடு

சென்னை, ஜன.3

தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியாசாகு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

காலநிலைக்கு ஏற்ற எதிர்காலத்தை உருவாக்க பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ரூ.1,000 கோடி நிதி திரட்டும் வகையில் தமிழ்நாடு பசுமை காலநிலை மாற்ற நிதியத்தை தமிழக அரசு ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய நிதி அமைப்பு, இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிதி பல்வேறு காலநிலை மாற்ற முயற்சிகள், தணிப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை குறித்த ஆலோசனைக் கூட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம் இரண்டாவது மண்டல அலுவலக கூட்ட அரங்கில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை குறித்த ஆலோசனை கூட்டம் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

நீர்நிலைகளில் கழிவுநீரை கலக்கும் லாரிகளின் உரிமம் ரத்து செய்யப்படும்: அமைச்சர் மெய்யநாதன் எச்சரிக்கை

சென்னை, ஜன.3–

நீர்நிலைகளில் கழிவுநீரை கலக்கும் லாரிகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என அமைச்சர் மெய்யநாதன் எச்சரிக்கை விடுத்தார்.

சென்னையை அடுத்த தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சீபுரம் மாவட்டங்களில் திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை தாங்கினார். அமைச்சர் மெய்யநாதன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர்கள் ராகுல்நாத் (செங்கல்பட்டு), ஆர்த்தி (காஞ்சீபுரம்), செங்கல்பட்டு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரதீப், எம்.எல்.ஏ.க்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, எழிலரசன், பாலாஜி, செல்வப்பெருந்தகை, மேயர்கள் வசந்தகுமாரி(தாம்பரம்), மகாலட்சுமி (காஞ்சீபுரம்), துணை மேயர் காமராஜ், மண்டல தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, மாநகராட்சி கமிஷனர் இளங்கோவன் செயற்பொறியாளர் முருகேசன், பொது பணித்துறை செயற்பொறியாளர் செல்வக்குமார், துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு,காஞ்சீபுரம் மாவட்டங்களில்...

பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் மெய்யநாதன் கூறியதாவது:–

கண்ட இடங்களில் கழிவுநீர் கொட்டப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் நீர் நிலைகள் பாதிக்கப்படுகிறது. எனவே செங்கல்பட்டு மற்றும் காஞ்சீபுரம் மாவட்டங்களில் உள்ள கழிவுநீர் லாரிகள் அனைத்தையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கழிவுநீர் லாரிகள் குறித்த விவரங்கள் முதலமைச்சர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு சம்பந்தப்பட்ட லாரிகளில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு கழிவுநீரை கொண்டு செல்லும் லாரிகள் எந்த இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமோ அங்கு செல்கின்றதா? என கண்காணிக்கப்படும். அதை மீறி. நீர்நிலைகளில் கழிவுநீரை கலக்கும் லாரிகளின் உரிமம் ரத்து செய்யப்படும்.

அதேபோல அடுக்குமாடி குடியிருப்புகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு தேவையான அளவு இருக்கின்றதா?, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் முறையாக செயல்படுகிறதா? என்பதை கண்காணிப்பதற்கு 2 குழுக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக ஒரு பறக்கும் படை அமைத்து இந்த பணிகள் அனைத்தையும் முறையாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

செங்கல்பட்டு, காஞ்சீபுரம் ஆகிய 2 மாவட்டங்களிலும் 15 நாட்களுக்கு ஒரு முறை பிளாஸ்டிக் பைகளை சேகரித்து, சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப வேண்டும். செம்பரம்பாக்கம் ஏரியில் கழிவு நீரை கலக்கும் தொழிற்சாலைகளின் உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டுறவு கடன் சங்கங்களை கணினிமயமாக்கும் திட்டத்தை கண்காணிக்க குழு

சென்னை, டிச.3–

கூட்டுறவு கடன் சங்கங்களை கணினி மையமாக்கும் திட்டத்தை கண்காணிக்க குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக கூட்டுறவுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

சட்டசபையில் விதி110ன் கீழ் முதலமைச்சர், “முழுமையாக கணினிமயமாக்கம், ‘கோர் பேங்கிங்’ போன்ற வசதிகளுடன் கூட்டுறவு நிறுவனங்கள் முறையாக கண்காணிக்கப்பட்டு எதிர்காலத்தில் சிறப்பாக நடத்திச் செல்லப்படும்” என்று அறிவித்தார்.

இந்நிலையில், கடந்த ஜூன் 30ந்தேதி மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சகம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை கணினிமயமாக்கும் திட்டத்துக்கான மத்திய நிதியுதவிக்கு ஒப்புதல் அளித்தது. திட்டத்தை கண்காணிக்க மாநில, மாவட்ட அளவில் குழுக்களை அமைக்கவும் அறிவுறுத்தியது. இதையடுத்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், இந்த குழுக்களை அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அதை பரிசீலித்த தமிழக அரசு, தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களை முழுமையாக கணினிமயமாக்கும் திட்டத்தை கண்காணிக்க மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் குழுக்களை அமைக்க ஒப்புதல் அளிக்கிறது.

மாநில அளவிலான குழுவிற்கு, கூட்டுறவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்தலைவராகவும், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், நபார்டு வங்கியின் தலைமைப் பொதுமேலாளர், தர்மபுரி, திருச்சி, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் அதிகாரிகள் உறுப்பினர்களாகவும், மாநில கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குனர் உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழுவிற்கு கலெக்டர் தலைவராகவும், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர், மண்டல இணை பதிவாளர்கள், வட்டார துணை பதிவாளர்கள், தொடக்க வேளாண் கடன் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குனர் உறுப்பினர் செயலாளராகவும் பணியாற்றுவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ரெலிகர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

RELIGARE HOME LOANS Values that bind

பதிவு அலுவலகம்: 1407, 14வது தளம், சிரஞ்சீவி டவர், 43, நேரு பிளேஸ், புதுடெல்லி – 110 019
மத்திய அலுவலகம்: ஏ3/4/5, கிளப் 125, டவர் பி, 2வது தளம், Sec–125, நொய்டா–201301.

மின்னணு ஏலம்/விற்பனை அறிவிப்பு

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் பாதுகாப்பு நல (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் 9–ன் கீழ் ரெலிகர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் (இனி "RHDFCL" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட அசையா சொத்துகள் மின்னணு–ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. சர்பாசி சட்டம் 2002–ன் பிரிவு 13(2)ன் கீழ் அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர் வங்கியில் கடன் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டார்.

2002 பாதுகாப்பு நல (அமலாக்கம்) விதிகளின் விதி 8(1)ன் கீழ் மற்றும் சர்பாசி சட்டம் 2002–ன் பிரிவு 13 (4)–ன் விதிகளின் கீழ் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அடமானம் வைக்கப்பட்ட சொத்தை அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் வங்கி தன்னிடம் உள்ள அதிகாரங்களுக்கு இணங்க சுவாதீனம் எடுத்துக் கொண்டது.

அதற்குப் பிறகும் கடன் வாங்கியவர் மேற்கூறிய கடன் தொகையை வங்கிக்கு திருப்பிச் செலுத்தத் தவறியதால், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அட்டவணை சொத்தை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார். அதன்படி அந்த சொத்து ''உள்ளது உள்ளபடி'', ''எங்கே உள்ளதோ அங்கேயே'', ''எப்படி உள்ளதோ அப்படியே'' கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து/கள் பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாங்க விரும்பும் ஏலதாரர்களிடம் இருந்து ஏலங்கள் மூலம் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	நோட்டீஸ் தேதி மற்றும் சுவாதீனத் தேதி	சொத்து விவரம்	ரிசர்வ் விலை EMD
1	திரு. வெங்கடரமணி A & திருமதி. உஷா V இருவரது முகவரி : 4வது தளத்தில் உள்ள பிளாட், ஸ்ரேஷ்டா பங்கஜம் கதவு எண்.23/8, ராஜா தெரு விரிவு, பிராடியர்ஸ் சாலை, மந்தைவெளி, சென்னை–600 028 ஈடுபெற்ற கடன்தாரர் (தொகை ரூ.) 14.11.2015 அன்று ரூ.1,85,02,670.36/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தைந்து லட்சத்து இரண்டாயிரத்து அறுநூற்று எழுபது மற்றும் முப்பத்தாறு பைசா மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள் உட்பட.	சர்பாசி சட்டம் 2002 பிரிவு 13(2)–ன் கீழ் 17.11.2015 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டது மற்றும் சர்பாசி சட்டம் 2002 பிரிவு 13(4)/14–ன் கீழ் அங்கீகரிக்கப் பட்ட அதிகாரியால் 25.03.2017 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்டது	**அட்டவணை A** : சென்னை – 600 028, மந்தைவெளி, ராஜா தெரு விரிவு (பிராடியர்ஸ் சாலை), கதவு எண்.23/8–ல் உள்ள நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். விஸ்தீரணம் 2 கிரவுண்ட் 1102 சதுர அடி. சர்வே எண்.4230/38, பிளாக் எண்.90, மைலாப்பூர் கிராமம், தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மைலாப்பூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. **அட்டவணை B** : அட்டவணை A–ல் உள்ள 5902 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 1474 சதுர அடி. இந்த குடியிருப்பு 4வது மாடி A & B & C–ல் உள்ள மொத்த பில்டப் ஏரியா 2610 சதுர அடி (உத்தேசமாக) அத்துடன் 3 கார் பார்க்கிங்கையும் உள்ளடக்கி உள்ளது.	ரூ. 2,28,42,000/– ரூ. 22,84,200/–

சொத்தை பார்வையிடுதல் : 23.01.2023 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

ஏலத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் : 25.01.2023 அன்று மாலை 3.00 மணி வரை

மின்னணு ஏலம் நடைபெறும் தேதி : 27.01.2023 காலை 11.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிட நீட்டிப்பில் நடைபெறும்

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. மேற்கண்ட சொத்தின் முழு விவரம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் தேதி மற்றும் நேரத்தை நிர்ணயித்த பிறகு சொத்துக்கள்/ஆவணங்களை ஆய்வு செய்யலாம். 2. மின்னணு ஏலம் ஆன்லைனில் மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மனை எண்.68, குர்கான், ஹரியானா, பின்கோடு – 122003 மூலம் நடத்தப்படும். 3. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கு முன், ஏலம் எடுப்பவர்கள் முறையான மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும் மற்றும் www.bankeauctions.com போர்ட்டலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து, தங்கள் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். 4. மின்னணு ஏலத்தில் பங்கேற்க விரும்பும் வருங்கால ஏலதாரர்களுக்கு சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், (தொடர்புகொள்ள வேண்டிய நபர்: திரு. வினோத் சௌகான், தொலைபேசி எண்.+91 9813887931, Delhi@c1india.com அல்லது Support@bankeauctions.com (உதவி எண்.7291981124, 25, 26) அவர்களிடம் இருந்து ஆன்லைன் பயிற்சி பெறலாம். 5. டேவணித் தொகை டெபாசிட் (EMD) RTGS/NEFT நிதி பரிவர்த்தனை மூலம் நடப்பு கணக்கு எண். 15280200004845 வங்கியின் பெயர் : பெடரல் வங்கி, பயனாளியின் பெயர்: ரெலிகர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் பெயரில் டெபாசிட் செய்யப்பட வேண்டும். காசோலைகள்/டிமாண்ட் டிராப்ட் ஆகியவை டேவணித் தொகை டெபாசிட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 6. ரிசர்வ் விலைக்கு கீழே உள்ள ஏலங்கள் மற்றும்/அல்லது டேவணித் தொகை டெபாசிட் செலுத்தப்படாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. ஏலதாரர்கள் தங்களின் மேலதிக ஏலத் தொகையை ஒவ்வொன்றுக்கும் ரூ.5000க்கு அதிகமாக அதிகரிக்கலாம். 7. வெற்றிபெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே வெற்றி பெற்ற ஏலதாரர் 25 சதவீத ஏலத்தொகை/விற்பனை விலையை (டேவணித் தொகை டெபாசிட் உட்பட) அதே நாளில் மின்னணு முறையில் / டிமாண்ட் டிராப்ட் /காசோலைகள் டெல்லியில் செலுத்தத்தக்க வகையில் ரெலிகர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்கு ஆதரவாக டெபாசிட் செய்ய வேண்டும். வங்கியால் விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் வெற்றிகரமான ஏலதாரரால் மீதமுள்ள தொகை செலுத்த வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் செலுத்தும் டேவணித் தொகை டெபாசிட் மற்றும் விற்பனை விலைக்கு எந்த வட்டியும் வழங்கப்படாது. வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் அல்லது ஏதேனும் இயல்பு நிலை தவறினால் டேவணித் தொகை டெபாசிட் அல்லது விற்பனை விலையில் 25%, எதுவாக இருந்தாலும் "RHDFCL" ஆல் அவை பறிமுதல் செய்யப்படும், 8. ஏல அறிவிப்பு RHDFCL–ன் இணையதளத்தில் https://www.religarehomeloans.com/cms/showpage/page/auctionnotices–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 9. வெற்றி பெற்ற ஏலதாரர், நகராட்சி அல்லது வேறு ஏதேனும் அதிகாரிகளுக்குச் சட்டப்பூர்வ நிலுவைத் தொகைகள்/வரிகள்/பில்கள் உட்பட அனைத்துச் செலவுகளையும், 'விற்பனைச் சான்றிதழின்' பதிவுக்காக முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் போன்றவற்றிற்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்களையும் ஏற்க வேண்டும். 10. எந்தவொரு அனுமதியையும்/என்ஓசியையும் எந்த ஆணையத்திடம் இருந்து வாங்குவதற்கு அல்லது வழங்கப்பட்ட சொத்து அல்லது வேறு ஏதேனும் நிலுவைத் தொகை அதாவது தண்ணீர்/மின்சார நிலுவைத் தொடர்பாக நடைமுறையில் உள்ள வேறு சட்டத்தின் கீழ் எந்தப் பொறுப்பையும் வங்கி ஏற்காது. 11. சொத்து மீது சட்ட ரீதியான ஏதேனும் நிலுவைகள், நிலுவைத் தொகைகள், வரிகள், வாட், டிடிஎஸ், ஜிஎஸ்டி, கட்டணங்கள் அல்லது சொத்து விற்பனைக்கான முத்திரை தீர்வை/பதிவு கட்டணம் ஆகியவை வாங்கியவரையே சாரும். 12. ஏலதாரர்கள் சொத்தின் மீதான வில்லங்கள்/கட்டுப்பாடுகள்/சட்டபூர்வமான நிலுவைகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் சொத்து, விஸ்தீரணம், தரம் குறித்து தங்களை திருப்திப்படுத்த வேண்டும். ஆன்லைன் ஏலத்தை சமர்ப்பித்தபின், சொத்துக்கள் மற்றும் பிற விஷயங்கள் மீதான கட்டணங்கள், வேறு எந்த விஷயங்கள் போன்றவற்றின் எந்தவொரு இயல்பான உரிமைகோரலும் ஏற்கப்படாது. 13. கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் அல்லது எந்தவித காரணத்தையும் கூறாமல், ஏலத்தை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது விற்பனையை ஒத்திவைக்கவோ/தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அல்லது விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவோ முழு உரிமையும் விருப்பமும் உள்ளது. 14. மீட்பு அதிகாரி, DRT–II, சென்னை அவர்களால் 23.02.2016 தேதியிட்ட DRC எண். 251/2014–ல் அனுப்பிய இணைப்பு உத்தரவு தவிர "RHDFCL"–க்கு தெரிந்தவரை வேறு எந்த வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், 17.12.2021 தேதியிட்ட அதன் உத்தரவின்படி, விற்கப்பட வேண்டிய சொத்துக்கள் மீதான ஏல விற்பனை நடவடிக்கைகளை நடத்துவதற்காக RHDFCL–ஆல் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தன் மூலம் அது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள நபர்கள், அவர்கள் திருப்தி அடையும் வகையில் சொத்துக்களை தாங்களே மதிப்பீடு செய்ய வேண்டும். RHDFCL எந்த வகையிலும் மேற்கூறிய சொத்துகளின் தகுதி/ஆவணம் தொடர்பாக எந்த வித உத்தரவாதமோ அல்லது பிரதிநிதித்துவத்தையோ அளிக்காது.

வேறு ஏதேனும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: 18001039711 / 18602664111 / 18003099711 மின்னஞ்சல் : customervice@religare.com

மேலே உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

பாதுகாப்பு நல (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 6(2), 8(6) மற்றும் 9 (1) விதிகளின்படி 15 நாட்களுக்கு முன்பான சட்டரீதியான அறிவிப்பு

கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகையையும் மேலும் ஏலத்திற்கு முன் புதுப்பிக்கப்பட்ட வட்டி மற்றும் துணை செலவுகளையும் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் மேலே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களின் மின்னணு ஏலம் நடைபெறும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி/செலவுடன் திரும்பப் பெறப்படும். ஏலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் எந்தவித ஏலமும் வரவில்லை என்றால், மேற்குறிப்பிட்ட ரிசர்வ் விலை அல்லது அதற்கு மேல் வருங்கால ஏலதாரருக்கு தனியார் அடிப்படையில் சொத்தை விற்பனை செய்ய ஈடுபெற்ற கடன்தாரருக்கு முழு உரிமை உண்டு.

இடம் : சென்னை — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி : 03.01.2023 — **மெசர்ஸ் ரெலிகர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

குறிப்பு: SARFAESI கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு ஏதேனும் செலுத்தப்பட்ட தொகையானது, நிறைவேற்றப்படும்/செட்டில்மெண்ட் நேரத்தில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் கணக்கிடுவதற்காக கணக்கிடப்படும்.

1-வது சிறப்பு நீதிபதி
மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம், சென்னை-600 104.
மனு எண் 2558/2022

S. ராம்குமார் ...மனுதாரர்
எதிர்
Flowcrete India P.Ltd மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்கள்

பெறுனர் :
1) Flowcrete India P.Ltd
எண்.36/46, 48வது தெரு,
9வது அவின்யூ, அசோக் நகர்,
சென்னை-600083.
2) லிபர்டி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், .C6,D6,E6, F6, லெவல்–V, அன்மோல் பழனி, நெ.88, G.N.செட்டி ரோடு, T. நகர்,சென்னை-600017

மேற்கண்ட வழக்கு தங்களின் வருகைக்காக 09.02.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களின் அட்சேபனையை தெரிவிக்கவேண்டும். தவறினால் மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

கே. இரவிக்குமார்
வழக்கறிஞர்

III Addi.
BEFORE THE FAMILY COURT, AT CHENNAI
I .A No. 1 of 2022
in
O.P.No. 933 of 2020

Uma Parameshwari
W/o.S.Kartik
No.15/14, Perundevi Ammal Nagar, Kolathur,
Chennai-600 099.
... Petitioner/Petitioner
Vs.
S.Kartik S/o.Somasundaram,
No.S/7A, Daffodils Apartments,
Gnanapragasam Nagar,
Pondicherry-605 008.
... Respondent/Respondent

To
S.Kartik, S/o.Somasundaram,
No.S/7 A, Daffodils Apartments,
Gnanapragasam Nagar,
Pondicherry-605 008.

The above named petitioner has filed the above Application I.A No.1/2022 in O.P.No.933/2020 against you (respondent) for an order to restore the above petition in O.P.No.933/2020 which was dismissed for default on 14.9.2022. The above matter is coming up for hearing on 19.1.2023 for your appearance. Hence make yourself be present on 19.1.2023 at 10.30 am before the III Additional Family Court, at Chennai, failing which the above matter will be heard in your absence.

Uma Parameshwari
W/o.S.Kartik
No15/14,Perundevi Ammal Nagar,
Kolathur, Chennai-600 099.

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

kotak Kotak Mahindra Bank

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 01.06.2022 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திருமதி தேவி மற்றும் நடராஜன் டிஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண் 4030HL16517988 & 4030HL18597065ன் கீழ் 23.12.2022 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,46,34,339.46/–(ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தாறு லட்சத்து முப்பத்துநான்காயிரத்து முன்னூற்றுமுப்பத்துஒன்பது மற்றும் நாற்பத்தாறு பைசா மட்டும்) மற்றும் 24.12.2022 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 09.02.2023 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.32,25,000/– (ரூபாய் முப்பத்திரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.3,22,500/– (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐநூறுமட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 08.02.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: ப்ளாட் எண். S–2 மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், இரண்டாவது தளம். விஸ்தீரணம் 1050 சதுர அடி (பொதுவான பகுதி உட்பட) ஒரு மூடிய கார் பார்க்கிங்குடன். 2126 சதுரடியில் பிரிவுபடாத பங்கு 523 சதுர அடி. மனை எண். 71, நரசிம்மன் நகர். எஸ்.எண். 21/1, பட்டா எண் 836ன்படி, துணைப்பிரிவு புதிய எஸ்.எண். 21/5 பொத்தேரி கிராமம், மறைமலை நகர் டவுன்ஷிப்,செங்கல்பட்டு தாலுக்கா மற்றும் காஞ்சீபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கு: மனை எண் 70, கிழக்கு: காலியான நிலம், மேற்கு: 30 அடி அகல தேவதாஸ் சாலை, தெற்கு: மனை எண் 72.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்டுள்ள ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338), திரு. சூரியா பெரியசாமி (+91 9600222111) & திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
தேதி : 03–01–2023 — **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

Fullerton India Credit Company Limited

Fullerton India Rishta Sammaan Ka

கார்ப்பரேட் அலுவலகம்: சுப்ரீம் பிசினஸ் பார்க், தளம் 5 மற்றும் 6, பி விங், போவய், மும்பை–400 076.

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து)

(கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 விதி 8 (1) ன் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள புல்லர்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட், பதிவு அலுவலகம், மேஹ் டவர்ஸ், 3வது தளம், பழைய எண்.307, புதிய எண். 165, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை, தமிழ்நாடு–600 095 மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் தளம் 5 மற்றும் 6, பி விங், சுப்ரீம் ஐடி பார்க், சுப்ரீம் சிட்டி, லேக் கேஸல் பின்புறம், போவய், மும்பை–400 076ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும் கடன்தாரர்கள் 1. ஓட்டல் ஹரிஷ் அன்ட் ஹரிஷ் பவன் 2. ஹரிஷ் ஸ்டோர்ஸ் 3. R. சேகர், 4. S. வனிதா, கடன் கணக்கு எண்கள்: 173101310617719, 173101310753570 ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ள 25.04.2022 தேதியிட்ட டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 1,52,93,417/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்திரண்டு லட்சத்து தொண்ணூற்றுமூன்றாயிரத்து நானூற்றுபதினேழு மட்டும்) மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்) மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13, துணை பிரிவு(4)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் 29 டிசம்பர் 2022 அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து புல்லர்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய தொகை 1,52,93,417/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்திரண்டு லட்சத்து தொண்ணூற்றுமூன்றாயிரத்து நானூற்றுபதினேழு மட்டும்) மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்க போதிய காலம் உள்ளது என்பதை சட்டப்பிரிவு 13–ன் துணைப் பிரிவு (8)ன்படி கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

அசையா சொத்து விவரம்: அயிட்டம் எண்.1: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வருவாய் தாலுக்கா, புதிய கிராம நத்தம் சர்வே எண்.670/17, பட்டாப்படி எண்.150, கிராம நத்தம் பழைய சர்வே எண்.355/7 (பகுதி), மண்ணூர் கிராமம், கதவு எண்.7–ல் உள்ள 337 சதுர மீட்டர் அதாவது 3640 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: திரு. சிட்டிபாபு ரெட்டியாருக்கு சொந்தமான நிலம், தெற்கில்: பூந்தோட்ட தெரு, கிழக்கில்: திருமதி. சாந்திக்கு சொந்தமான நிலம், மேற்கில்: திருமதி. ஆர். லட்சுமி அம்மாளுக்கு சொந்தமான நிலம்.

அயிட்டம் எண் 2 : காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, ஸ்ரீபெரும்புதூர் கிராமம், கிராம எண்.42, பட்டாப்படி சர்வே எண்.1076/3சி, சர்வே எண்.1076/3, சொர்க்கம் நகர், மனை எண்.3–ல் உள்ள 3686 சதுர அடி காலி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள் : வடக்கில்: சர்வே எண்.1075; தெற்கில் : மாநில நெடுஞ்சாலை; கிழக்கில்: மனை எண்.4; மேற்கில் : மனை எண்.2.

அயிட்டம் எண் 3: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வருவாய் தாலுக்கா, பட்டா எண்.3376, புதிய உப பிரிவு சர்வே எண்.1246/3பி1பி, நன்செய் சர்வே எண்.1246/3பி, ஸ்ரீபெரும்புதூர் கிராமம் எண்.42–ல் உள்ள 27 சென்ட் நிலத்தில் 10 சென்ட் காலி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.1246/3பி–ல் உள்ள மீதி நிலம், தெற்கில் : சிதம்பரம் நாயக்கருக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: திருவள்ளுவர் சாலை, மேற்கில் : ஏரிக்கரை. இந்த சொத்தானது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது.

இடம்: காஞ்சீபுரம் — ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி : 03.01.2023 — புல்லர்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

ORIX

(முன்னர் OAIS ஆட்டோ பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
(ORIX ஆட்டோ இன்ப்ராஸ்ட்க்ரசர் சர்வீசஸ் லிமிடெட்டின் துணை நிறுவனம்)
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மாரோல் கூட்டுறவு தொழில் பேட்டை,
அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059
Tel.: + 91 22 2859 5093 / 6707 0100 I Fax: +91 22 2852 8549
Email: info@orixindia.com I www.orixindia.com I CIN: U74900MH2006PLC163937

சுவாதீன அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002,விதி 8(1)

M/s. ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டின் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், கடன்தாரர்/உடன்கடன்தாரர்கள்/அடமானதாரர்களாகிய எபினேசர் வி எம் பிரேமா இ ஆகியோருக்கு அனுப்பிய 13 அக்டோபர் 2022 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை ரூ.34,29,833.19/ (ரூபாய் முப்பத்துநான்கு லட்சத்து இருபத்துஒன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று மற்றும் பத்தொன்பது பைசா மட்டும்) மற்றும் டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் நாள் வரையிலான காலத்திற்கு மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்களை அந்த நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

1. மேற்சொன்ன அறிவிப்பு அனுப்பிய பிறகும் அந்த தொகை மற்றும் வட்டி, இதர கட்டணங்களை கடன்தாரர்கள் மற்றும் உடன்கடன்தாரர்கள் திரும்ப செலுத்தத் தவறியதால், கடன்தாரரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4)வது பிரிவின் கீழும், கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 2022ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் 29.12.2022 அன்று சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார்.
2. செலுத்த வேண்டிய தொகை ரூ.34,29,833.19/ (ரூபாய் முப்பத்துநான்கு லட்சத்து இருபத்துஒன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று மற்றும் பத்தொன்பது பைசா மட்டும்) மற்றும் டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் நாள் வரையிலான காலத்திற்கு மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்களுக்கும் ஈடாக இருப்பதால்,இந்த சொத்தில் யாரும் எந்தவித டீலிங்குகளையோ, பரிவர்த்தனைகளையோ வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடன்தாரர்கள் மற்றும் உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுகிறது.

அடமான சொத்தின் விவரம்

"சபா அபார்ட்மென்ட்" என்று அழைக்கப்படும் கட்டிடத்தின் 3வது மாடியில் உள்ள ப்ளாட் எண். T–2 மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், 750 சதுர அடி (பொதுவான பகுதியை உள்ளடக்கியது), 3115 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 235 சதுர அடி நிலம் கதவு எண். 31/13, 33/14 35/15, 37/16, சச்சிதானந்தம் தெரு, (சொத்து வரி ரசீதுபடி நெல் வயல் தெரு) கொசப்பேட்டை, சென்னை–600012, பழைய சர்வே எண்: 2651, தற்போதைய ஆர்.எஸ். எண். 2355/169, பட்டாபடி ஆர்.எஸ். எண்.2355/90, 2355/169, 2355/165, 2355/170, 2355/131, பிளாக் எண் 37, புரசைவாக்கம் கிராமம், பெரம்பூர்–புரசைவாக்கம் தாலுக்கா, மற்றும் எல்லைகள்: வடக்கு: திரு. ஹுசைன் சாஹிப் வீடு, தெற்கு: ஆர்.எஸ். எண்.2355/102, 2355/130, கிழக்கு: ஆர்.எஸ். எண். 2355/147, மேற்கு: சச்சிதானந்தம் தெரு
கடன் கணக்கு எண் LN0000000014492

தேதி: 29.12.2022 — **ஒப்பம்/–**
இடம்: சென்னை — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண்.92/2022

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXXIX/1925 தொடர்பான மனுவில் 28.01.2014 அன்று இறந்து போன திருமதி N.R.K.சேதுராமம்மாள் அவர்களின் உயில் சாசனம் மற்றும் கொடிசில் சொத்துக்கள் தொடர்பான மனு

1) P.A.S. அழகர் ராஜா, த/பெ. P. S. A. சங்கர் ராஜா
ப.நெ.50, பு.நெ.13, P.S.K.நகர், ராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
2) P.A.S. கிருஷ்ணம்மா ராஜா, த/பெ. P. S. A. சங்கர் ராஜா
ப.நெ.50, பு.நெ.13, P.S.K.நகர், ராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு –மனுதாரர்கள்

எதிராக

1) N.K. ராமசாமி ராஜா, த/பெ.N.R.கிருஷ்ணமா ராஜா
கதவு நெ.1, P.A.C.R.சாலை, அலகை நகர்,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
2) திருமதி. N.S.வசந்தா, க/பெ.N.R.K. சுப்புராம ராஜா,
ப.நெ.50, பு.நெ.13, P.S.K.நகர்,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
3) N.K. ஸ்ரீகந்தன் ராஜா, த/பெ.N.R.கிருஷ்ணமா ராஜா
கதவு நெ.14, P.S.K.நகர், ராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
4)N.R.K. வெங்கடேஷ் ராஜா, த/பெ.N.R.கிருஷ்ணமா ராஜா
கதவு நெ.6, P.S.K.நகர், ராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
5) N.R.K. ராம்குமார் ராஜா, த/பெ.N.R.கிருஷ்ணமா ராஜா
கதவு நெ.7, P.S.K.நகர்,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு
6) ரமணி தேவி, க/பெ. P. S. A. சங்கர் ராஜா
ப.நெ.50, பு.நெ.13, P.S.K.நகர்,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு – எதிர்மனுதாரர்கள்

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், P.S.K.நகர், நெ.102 என்ற முகவரியில் வசித்து வந்து 28.01.2014 அன்று இறந்து போன திருமதி N.R.K.சேதுராமம்மாள் அவர்களின் உயில் மற்றும் கொடிசில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்குப்படுவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 06.02.2023 அன்று காலை 10.30 மணிக்கு நடவடிக்கைகளை பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ந் தேதி
சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

A.சிவாஜி
மனுதாரரின் வழக்கறிஞர்
நெ.67, கூடுதல் சட்ட அறைகள்,
உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–600 104

உப்பலபு சுரேஷ்குமார்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு–1
உயர்நீதிமன்றம்,சென்னை–600104